ஜெபத்தின் நான்கு படிகள்

படி 3: ஸ்தோத்திரம்: 32 நிமிடங்கள்

தேவனுடைய பண்புகளின்படி அவர் யார் என்பதைப் புகழ்ந்து தேவனைத் ஸ்தோத்திரியுங்கள்.
உங்கள் குழுத் தலைவர். உங்கள் ஜெப நேரத்திற்கு மையமாக இருக்க தேவனுடைய ஒரு பண்பையும் அதனுடன் தொடர்புடைய வேதாகம வசனங்களையும் தேர்ந்தெடுப்பார். குழு உறுப்பினர்கள் மாறி மாறி அந்த வசனங்களை சத்தமாக வாசிக்கலாம். அந்த பண்பையும் வசனங்களையும் கவனத்தில் கொண்டு. ஒவ்வொருவரும் ஒருமனதாக *உரையாடல் போன்று. ஒத்துழைப்பு ஜெபமாக குறுகிய ஜெபங்களால் தேவனைத் துதிக்க வேண்டும். உதாரணமாக. உங்கள் குழுத் தலைவர் "மேய்ப்பன், என்பதைக் தேவனுடைய பண்பாகத் தேர்ந்தெடுத்தால். அவர் ஜெபத்தை. "தேவனே. எங்களை மிகுந்த கவனத்துடன் பராமரிக்கும் நல்ல மேய்ப்பராக நீங்கள் இருப்பதற்காக உம்மைத் துதிக்கிறோம், என்று" ஆரம்பிப்பார். அதற்கு வேறு ஒரு குழு உறுப்பினர் "ஆம் ஆண்டவரே. நீங்கள் எங்களை கவனித்து காக்கவும் வழிநடத்தவும் செய்கிறீர், என்று" இணைந்து ஜெபிப்பார். இப்படியாக குழுவினர் தேவனைத் துதித்து ஜெபத்தைத் தொடருவர்.

படி 4: அமைதியான பாவ ஒப்புதல் 45 நிமிடங்கள்

மன்னிக்கும் தேவனுக்குள் உங்கள் பாவங்களை அமைதியாக அறிக்கையிடுங்கள்.

குழுத் தலைவர் பரிசுத்த ஆவியானவரே. எங்கள் இருதயங்களை ஆராய்ந்து. உமக்கு விருப்பமில்லாத எதையும் மனந்திரும்பச் செய்ய எங்களுக்கு உதவும், என்று ஜெபிப்பார்.

அறை அமைதியாக இருக்கும். உறுப்பினர்கள் தங்கள் இருதயத்திலிருந்து தேவனிடம் அமைதியாக பாவங்களை அறிக்கையிடுவார்கள்.

படி 5: நன்றி செலுத்துதல் 7½ நிமிடங்கள்

தேவன் செய்த நன்மைகளுக்காக நன்றியுடன் ஜெபியுங்கள்.
குழுத் தலைவர் பிதாவே. எங்கள் பாவங்களை மன்னித்ததற்கு நன்றி செலுத்துகிறோம். இப்போது பதிலளிக்கப்பட்ட ஜெபங்களுக்கும் நன்றி செலுத்த விரும்புகிறோம். என் மகனுக்கு பள்ளியில் ஒரு கிறிஸ்தவ நண்பனை அனுப்பியதற்கு நன்றி, என்று ஜெபிப்பார்.

ஒரு உறுப்பினர் ஒப்புக்கொண்டு நன்றி பிதாவே. இப்போது அவனும் அவன் நண்பனும் உம்மில் உறுதியாக இருக்க முடியும், என்று ஜெபிப்பார்.

பின்னர் அவர் தொடர்ந்து கர்த்தாவே. என் மகளின் அறிவியல் ஆசிரியர் பாடத்தை நன்றாக விளக்குவதற்கு நன்றி, என்று ஜெபிப்பார்.

மற்றொரு உறுப்பினர் ஒப்புக்கொண்டு ஜெபித்து. பின்னர் தனது சொந்த நன்றி ஜெபத்தைச் சொல்வார்.

படி 6: பரிந்துபேசுதல் நிமிடங்கள்

நம்முடைய பிள்ளைகள், ஆசிரியர்கள், ஊழியர்கள், பள்ளி சம்பந்தமான கவலைகள், மற்றும் Moms in Prayer சார்பாக தேவனிடம் வாருங்கள். இரண்டு அல்லது மூன்று பேராகக் குழுக்களாகப் பிரிந்து கொள்ளுங்கள்.

- **பிள்ளைகள்:**

குழுத் தலைவர் ஒரு வேத வசனத்தைப் பகிர்ந்து பிள்ளைகளுக்காக ஜெபிக்கச் சொல்வார். உதாரணத்திற்கு, உபாகமம் 4:36 லிருந்து, கர்த்தர் குழந்தையின் பெயர் வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய்.

அடுத்த குழந்தைக்குச் செல்லும் முன், இந்த வசனத்திலிருந்து வரும் எல்லா ஜெபக் கருத்துகளையும் அந்தக் குழந்தைக்காக ஜெபியுங்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் வேதாகம வசனத்தின் அடிப்படையில் ஜெபித்த பிறகு, ஒவ்வொரு குழந்தையின் குறிப்பிட்ட தேவைகளுக்காகவும் ஜெபியுங்கள். உதாரணமாக, இரட்சிப்பு, ஒரு ஆசிரியருடன் உள்ள கவலை, மதிப்பெண்கள், நண்பர்களின் இரட்சிப்பு, போன்றவை. ஒவ்வொரு முறையும் ஒரே குழந்தைக்காக ஒருமனதாக ஜெபியுங்கள்.

- **ஆசிரியர்கள்:**

இரட்சிக்கப்பட்ட ஆசிரியர்கள் என்றால், உங்கள் பிள்ளைக்கு ஜெபித்த அதே வசனத்தை அவர்களுக்கும் ஜெபியுங்கள். பின்னர், குறிப்பிட்ட விண்ணப்பங்களுக்காக ஜெபியுங்கள்.

இரட்சிக்கப்படாத ஆசிரியர்கள் என்றால், அவர்கள் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள். பின்னர், குறிப்பிட்ட விண்ணப்பங்களுக்காக ஜெபியுங்கள்.

- **பள்ளிகள்:**

பள்ளியின் பெயர், வேதாகம கொள்கையிலும், உயர்ந்த நெறிமுறைத் தரங்களாலும் வழிநடத்தப்படுவதற்காக.

பள்ளியின் பெயர், பாதுகாக்கப்படட்டும், கண்காணிக்கப்படட்டும், எல்லா தீமையிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்காக.

பள்ளியின் பெயர், மாணவர்களும், ஊழியர்களும், இயேசு கிறிஸ்துவிலும், அவருடைய அன்பிலும் தங்கள் அடையாளத்தை அடித்தளமாகக் கொள்ளப்படுவதற்காக.

- **Moms in Prayer இயக்கம்:**

தற்போதுள்ள ஒவ்வொரு குழுவையும் நிலைநிறுத்த, எண்ணிக்கையை அதிகரித்து, உலகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு பள்ளியையும் ஜெபத்தில் மூடுவதற்காக.

அதிகமான ஒருங்கிணைப்பாளர்களையும், குழுக்களையும் எழுப்பி, குழுவாக ஜெபிப்பதன் வல்லமையை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ளச் செய்ய.

கிறிஸ்து இயேசுவில் அவருடைய மகிமையின் செல்வத்தின்படி, Moms in Prayer/இன் அனைத்துத் தேவைகளையும் தேவன் நிறைவேற்றுவதற்காக.